(ஈ) உதகையில் படப்பிடிப்பின்போது கன்னட நடிகருக்கேற்பட்ட இடையூறு.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம் ஊட்டியிலே படம் எடுக்கின்ற நேரத்தில் மிகப்பெரிய அசம்பாவிதம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றியெல்லாம் எந்த முறையில் கொண்டுவர வேண்டுமோ அந்த முறையில் கொண்டுவர வேண்டும். ராஜ்குமார் பிரச்சினையை எடுத்தால் பெங்களூர் பிரச்சினை என்று வந்துவிடும். ஆகவே, இதையெல்லாம் சட்டக் சபைக்குள் கொண்டு வரும்பொழுது மிகவும் ஜாக்கிரதையாகக் கொண்டுவர வேண்டும்.

(உ) திருச்சியில் நடைபெறும் சமூகவிரோதச் செயல்கள்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சி நகரத்திலே சமூக விரோதிகளின் கையோங்கி அதிகாரத்தையே அவர்கள் எடுத்துக்கொண்டு கலவரங்களை உண்டாக்கி, நகரத்தின் அமைதியைக் கெடுத்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிகாரத்தை யார் கையிலிருந்து யார் கைப்பற்றினார்கள், எப்பொழுது கைப்பற்றினார்கள் என்றெல்லாம் நான் கேட்டுக்கொண்டிருக்க முடியும்? இதை அனுமதிப்பதற்கில்லை.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுதுபார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுதுபார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."